ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1946/10 - 2015 දෙසැම්බර් මස 22 වැනි අඟහරුවාදා - 2015.12.22

*1946/10 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 24/51 (X)*

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஈ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ், போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

போக்குவரத்து மற்றும் சிவில்
விமான சேவைகள்
அமைச்சர்.

கொழும்பு,
2015, திசெம்பர் 07.

ஒழுங்குவிதிகள்

2011, ஒற்றோபர் 5 ஆந் திகதிய 1726/12 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மோட்டார் வாகன (வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதிய) ஒழுங்குவிதிகள் அதன் 2 (1) ஆம் ஒழுங்குவிதியை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"2. (1) (இதனகத்துப் பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 213 ஈ என்னும் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட வெகுமதி மற்றும் ஊக்குவிப்பு நிதியம், பின்வருவோரைக் கொண்டமைந்த ஆளும் சபையினால், முகாமை செய்யப்படுதலும் நிர்வகிக்கப்படுதலும் வேண்டும் :-

(அ) மோட்டார் வாகன தலைமை அதிபதி அவரே ஆளும் சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) மோட்டார் வாகன ஆணையாளர் (நிர்வாகம்) ;

(இ) மோட்டார் வாகனத்தின் பிரதான நிதிசார் அலுவலர்;

(ஈ) போக்குவரத்து என்னும் விடயம் எந்த அமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் போக்குவரத்து அமைச்சின் பிரதிநிதி ஒருவர்;

(உ) திறைசேரிச் செயலாளரினால், பெயர் குறித்து நியமிக்கப்படும் திறைசேரியின் பிரதிநிதி ஒருவர்.".

*01- 385*



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*